# ।। ஸ்ரீமத் பகவத் கீதை சரியான உச்சரிப்பு வழிகாட்டி நிலை 4 ॥

## மாஹேஷ்வர் ஸூத்திரம்

| | | |
|---|---|---|
| 1. அஇஉண் । | 6. லண் । | 11. க2ப2ச2ட2த2சடதவ் । |
| 2. ருலுக் । | 7. ஞமஙணநம் । | 12. கபய் । |
| 3. ஏஓங் । | 8. ஜ2ப4ஞ் । | 13. ஶஷஸர் । |
| 4. ஐஔச் । | 9. க4 ட4த4ஷ்। | 14. ஹல் । |
| 5. ஹயவரட் । | 10. ஜ3ப3க3ட3த3ஶ் । | |

**'ப்ரத்யாஹாரம்' -** சொற்களின் விளக்கம் அல்லது விதிகளில் ஏதேனும் ஒரு சிறப்பு எழுத்துக் குழுக்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மாஹேஷ்வர் ஸூத்திரங்களிலிருந்து அந்த எழுத்துக்களை ப்ரத்யாஹாரம் செய்வதன் மூலம் சுருக்கமாக எடுத்துக்கொள்கிறோம். ப்ரத்யாஹாரத்தின் பொருள் - சுருக்கமான சொல். முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் இணைத்து ப்ரத்யாஹாரம் உருவாகிறது.

**எ.கா.** = '**அச்**' ப்ரத்யாஹாரம் - முதல் மாஹேஷ்வர் ஸூத்திரமான 'அஇஉண்' என்பதன் ஆரம்ப எழுத்தான 'அ' , நான்காவது ஸூத்திரமான 'ஐஔச்' இன் கடைசி எழுத்தான 'ச்' உடன் சேர்க்கும்போது 'அச்' ப்ரத்யாஹாரம் உருவாகிறது. எனவே, 'அ, இ, உ, ரு, லு, ஏ, ஐ, ஓ, ஔ' இந்த எழுத்துக்கள் 'அச்' ப்ரத்யாஹாரில் அடங்கி இருக்கின்றன .

# ஸந்தி4 விதிகள்

இரண்டு எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேரும்போது ஸந்தி4 நடைபெறுகிறது. ஒன்றாக வரும் எழுத்துக்கள் உயிரெழுத்துக்களாக இருந்தால், அந்த ஸந்தி4 ஸ்வர ஸந்தி4, மெய் எழுத்துக்களாக இருந்தால் வ்யஞ்ஜன் ஸந்தி4, அனுஸ்வாரமானால் அனுஸ்வார ஸந்தி4, விஸர்கமாக இருந்தால் அது விஸர்க ஸந்தி4. ஸந்தி4 ஏற்படும் போது, ஒன்று சேரும் எழுத்துக்களில் ஒன்றிலோ அல்லது இரண்டு எழுத்துக்களிலுமோ மாற்றம் ஏற்படும்.

## வ்யஞ்ஜன் அல்லது ஹல் ஸந்தி4: –

மெய்யெழுத்துக்களுடன் மெய்யெழுத்து சேரும் போது ஏற்படும் மாற்றத்தை வ்யஞ்ஜன் ஸந்தி4 என்கிறோம். வ்யஞ்ஜன் ஸந்தி4யை சமஸ்கிருதத்தில் ஹல் ஸந்தி4 என்றும் அழைப்பர். அதில் பல வகைகள் உள்ளன.

### 1. ஶ்சுத்வ ஸந்தி4 –

- **ஸ்தோ: ஶ்சுனா ஶ்சு : -** 'ஸ' காரம் , 'த'வர்கம் இவை 'ஶ'காரம் ,மற்றும் 'ச' வர்க்கத்தினுடன் இணையும்போது, 'ஸ'காரம் மற்றும் 'த' வர்கத்தின் இடத்தில் ஶகாரம் மற்றும் 'ச' வர்கம் ஆக மாறுகிறது. எழுத்துக்களின் இணைப்பில் 'ஸ'காரம், 'த'வர்கம் மற்றும் 'ஶ'காரம் 'ச' வர்க எழுத்துக்களின் வரிசைப்படி முன்னும் பின்னும் வர முடியும். ஆனால் மாற்றம் 'ஸ'காரம் மற்றும் 'த' வர்க்கத்தின் இடத்தில் தான் நிகழும் .

  எ.கா.- மநஸ்+சஞ்சலம்= மநஶ்சஞ்சலம் (6/26),

  யுந்+ஜீத்=யுஞ்ஜீத் (6/10), யத்(2)+ஞாத்வா=யஜ்ஞாத்வா (4/16)

| ஒன்றாகவே வரக்கூடிய இரு மெய்யெழுத்துகள் | | ஸ மற்றும் 'த ' வர்கத்தின் மாற்றமடைந்த எழுத்துக்கள் |
|---|---|---|
| ஸ் | ஶ், ச்1, ச்2, ஜ், ச்4, ஞ் | ஶ் |
| த் | | ச் |
| த்2 | | ச்2 |
| த்3 | | ஜ |
| த்4 | | ச்4 |
| ந் ,ன் | | ஞ் |

(குறிப்பு **–** க்ஷ = க்+ ஷ **,** த்ர = த் + ர அதே போல் ஞ = ஜ் + ஞ என்று வரும்**,** அதாவது இவற்றுள் முறையே க்**,** த் மற்றும் ஜ் எழுத்துக்களுக்கான சேர்க்கை விதிகளே இவற்றிற்கும் பொருந்தும்.**)**

### 2. ஷ்டுத்வ ஸந்தி4 –

- **ஷ்டுனா ஷ்டு: -** 'ஸ'காரக மற்றும் 'த' வர்கத்துடன் ,'ஷ'காரக மற்றும் 'ட' வர்க்கத்தோடு இணையும் போது முறையே 'ஸ'காரத்தின் இடத்தில் 'ஷ'காரமாகவும் 'த' வர்கத்தின் இடத்தில் 'ட'வர்கமாக மாறுகிறது. இந்த இணைப்பின் போது 'ஸ'காரம் ,'த' வர்கம் மற்றும் 'ஷ'காரம் மற்றும் 'ட' வர்கம் எழுத்துக்களின் வரிசை முன் பின் வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் எழுத்து மாறுபாடு 'ஸ'காரத்திலும், 'த' காரத்திலுமே மட்டும் நடைபெறுகிறது.

எ.கா.- த்ருஷ் + த: = த்ருஷ்ட: (2/16), ஸ்ருஷ் + த்வா = ஸ்ருஷ்ட்வா(3/10), ப்ரநஷ் + த: = ப்ரநஷ்ட:(18/72)

| சேர்ந்தே வரக்கூடிய இரு மெய்எழுத்துக்கள் | | மாறிய ரூபம் |
|---|---|---|
| ஸ் | ஷ், ட்1, ட்2, ட்3, ட்4, ண் | ஷ் |
| த் | | ட்1 |
| த்2 | | ட்2 |
| த்3 | | ட்3 |
| த்4 | | ட்4 |
| ந்,ன் | | ண் |

## 3. சர்த்வ ஸந்தி4 –

- **க2ரிச –** வர்க்கத்தின் முதல், இரண்டாம் எழுத்து மற்றும் ஶ, ஷ, ஸ (கடின எழுத்துக்கள்) பின்னால் வந்தால், அந்த வர்க்கத்தின் முதல், இரண்டு, மூன்று நான்காம் எழுத்துக்கள் க, ச, ட, த, ப, ஶ, ஷ, ஸ, (சர்) எழுத்துக்களாக மாறுகின்றன.

  எ.கா.- ஹ்ருத்3 + ஸ்த2ம் = ஹ்ருத்ஸ்தம் (4/42), தத்3 + குருஷ்வ = தத்குருஷ்வ(9/27), சித்3 +த்வா=சி2த்த்வா(4/42)

- **வாSவஸானே –** அவஸானத்தில் (அதாவது பதத்தின் கடைசியில்) வர்க்கங்களின் முதல், இரண்டு, மூன்று, நான்காம் எழுத்துக்கள் மற்றும் ஶ, ஷ, ஸ, ஹ (ச4ல்) வரும்போது தேவைப்பட்டால்(optional) க, ச, ட, த, ப, ஶ, ஷ, ஸ (சர்) வாக மாறுகின்றன. ஆனால் இந்த ஸந்தி4 கட்டாயம் இல்லை.

  எ.கா.- ஸுஹ்ருத்3 = ஸுஹ்ருத்(9/18), வாக்3 = வாக், உபநிஷத்3 =உபநிஷத், ப4க3வத்3=ப4க3வத்

## 4. ஜஶ்த்வ ஸந்தி4–

- **ச2லாந் ஜஷ் ஜஷி** - ஐந்து வர்க்கீய எழுத்துக்களில் முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது எழுத்துக்கள், எந்த ஒரு மிருது வ்யஞ்ஜனம் அல்லது உயிரெழுத்து இவற்றிற்கு முன்னால் வந்தால், அது அதே வர்க்கத்தின் மூன்றாவது எழுத்தாக(க3,ச3,ட3,த3,ப3) மாறிவிடுகிறது.

  எ.கா. - லப்4+த்4வா = லப்3+த்4வா = லப்3த்4வா (4/39), போ3த்4+த4வ்யம் = போ3த்3+த4வ்யம் = போ3த்3த4வ்யம் (4/17), யுத்4+ த4 = யுத்3த (2/37)

## 5. த4த்வ ஸந்தி4 -

- **ச4ஷஸ்ததோ2ர்தோ4Sத4:** - வர்க்கீய வ்யஞ்சன எழுத்துக்களின் நான்காவது எழுத்துக்கு பின்னால் த1, அல்லது , த2 வந்தால், அவை த4காரமாக மாறுகின்றன. (இந்த ஸந்தி4க்குப் பிறகு, ஜஶ்த்வ ஸந்தி4யின் காரணமாக முதல் எழுத்து அதன் மூன்றாவது எழுத்தாக மாறுகிறது.)

| முன்னெழுத்து | பின்னெழுத்து | மாற்றியமைக்கப்பட்ட வடிவம் |
|---|---|---|
| க்4 | | க்3த்4 |
| ச்4 | | ஜ்3த்4 |
| ட்4 | த்1/த்2 | ட்3த்4 |
| த்4 | | த்3த்4 |
| ப்4 | | ப்3ப்4 |

- எ.கா. போ3த்4 + தவ்யம்= போ3த்3+ த4வ்யம் = போத்3த4வ்யம் (4/17), ருத்4+ த்வா = ருத்3+ த்4வா = ருத்3த்4வா (4/29)

## 6. ஷத்வ ஸந்தி4 –

- **வ்ரஷ்சப்4ரஸ்ஜஸ்ருஜம்ருஜயஜராஜப்4ராஜச்ச2ஶாந் ஷ:–** வ்ரஷ்ச முதலிய ஏழு மூல (தா4து) வார்த்தைகள் மற்றும் ச2காரந்த மற்றும் ஷகாரந்த மூல வார்த்தைகளில், கடைசி எழுத்து 'ஷகார'மாக மாற்றப்படுகிறது. இது பதத்தின் கடைசியில் இருப்பதனாலும் அல்லது 'ச4ல்' என்ற பதம் பின்னால் வருவதனாலும் ஏற்படுகிறது.

  எ.கா. - த்3ருஶ் மூலவார்த்தையிலிருந்து த்3ருஷ் மற்றும் த்3ருஷ்டி இந்த சூத்திரத்தின்படியே அமைகிறது.

- **ஆதேஶப்ரத்யயயோ: -** முந்தைய மாற்றத்தின் காரணமாக 'ஸ்' வந்திருந்தாலோ அல்லது பின்னொட்டில் 'ஸ்' இருந்து அதற்கு முன் 'இண்' (இ, உ) அல்லது 'க வர்கம்' இருந்தாலோ, 'ஸ'காரம் 'ஷ'காரமாகி விடுகிறது.

  எ.கா. - போ4க் + ஸ்யஸே= போ4க் + ஷ்யஸே = போ4க்ஷ்யஸே (2/37), ஹநி+ ஸ்யே = ஹநி+ ஷ்யே = ஹநிஷ்யே (16/14)

## 7. கத்வ ஸந்தி4–

- **ஷடோ4ஹோ கஹ ஸி–** 'ஷ ' மற்றும் 'ட4' ஆனது 'ஸ' பின்னால் இருக்கும் போது 'க' ஆக மாறுகிறது.

  எ.கா. - விநம்ஷ் + ஷ்யஸி = விநங்க் + ஷ்யஸி = விநங்க் + ஷ்யஸி= விநங்க்ஷ்யசி (18/58)

## 8. குத்வ ஸந்தி4

- **சோ: கு:** - ஒரு பதத்தின் முடிவில், அதன் முன் இருக்கும் 'ச'வர்கத்தின் எந்த எழுத்தும், அதன் எதிரில் அந்தஸ்த: (அகம்) மற்றும் அனுநாஸிகம் (நாசி) தவிர வேறு எந்த எழுத்தாக இருந்தாலும் அல்லது இல்லாமல் போனாலும், அது முறையே ' க' வர்க்கமாக மாற்றப்படும்.

| முன்னெழுத்து | பின்னெழுத்து | மாற்றியமைக்கப்பட்ட வடிவம் |
|---|---|---|
| ச் | முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது எழுத்து, ய, ஷ,ஸ,ஹ முடிவில் | க் |
| ச்2 | | க்2 |
| ஜ் | | க்3 |
| ச்4 | | க்4 |

எ.கா- முச் + த: = முக்த: (5/28)

## 9. துகா3க3ம ஸந்தி4–

- **சே2 ச –** குறில் உயிர் எழுத்துக்களுக்கு பிறகு 'ச்2' இருந்தால், 'ச்2' க்கு முன்னால் 'த்' வருகிறது, அதன் பிறகு ஶ்சுத்வ ஸந்தி4யினால் 'ச'காரமாக மாறி விடுகிறது.

  எ.கா. க்ருஷ்ண + சே2த்தும் = க்ருஷ்ண+ த்+ சே2த்தும் = க்ருஷ்ண + ச்+ சே2த்தும் = க்ருஷ்ணச்சே2த்தும் (6/39)

- **பதா3ந்தாத்3வா-** ஒரு பதத்தின் நீண்ட உயிரெழுத்துக்குப் பின்னால், 'ச2' இருந்தாலும் 'த்' விருப்பத்திற்கேற்ப (optional) உபயோகிக்கப் படுகிறது. கட்டாயம் இல்லை.

  எ.கா. – கா3யத்ரீ + ச2ந்த3ஸாம் = கா3யத்ரீச்ச2ந்த3ஸாம் அல்லது கா3யத்ரீ ச2ந்தஸாம் (10/35)

## 10. ஙமுடா3க3ம ஸந்தி4–

- **ஙமோ ஹ்ரஸ்வாத3சி ஙமுண்நித்யம் –**

  ஏதேனும் ஒரு குறில் எழுத்தைத் தொடர்ந்து ங், ண், அல்லது ந் வந்து, அதற்கு பிறகு ஏதேனும் உயிர் எழுத்து இருந்தால், ங், ண், மற்றும் ந் முறையே இரட்டிப்பாக மாறும்.

  எ.கா. - குர்வந் + அபி = குர்வந்நபி (5/7), ஸந் + அவ்யயாத்மா = ஸந்நவ்யயாத்மா (4/6), ப்ரஹஸந் + இவ = ப்ரஹஸந்நிவ (2/10)

## 11. ருத்வ ஸந்தி4

- **நஶ்ச2வ்யப்ரஶாந் –** ஒரு பதத்தில் 'ந' காரத்திற்கு பின் ச, ச2, ட, ட2, த, மற்றும் த2 போன்ற எழுத்துக்கள் வந்து, அதன் பின்னால் எந்த ஒரு உயிர் எழுத்தோ ஹ், ய், வ், ர், ல், ங், ஞ், ண், ந் போந்ற எழுத்துக்கள் இருந்தால் 'ந'காரகம் ஸ், ஶ்,மற்றும் ஷ் ஆக மாறிவிடுகிறது மற்றும் அதற்கு முன் உள்ள எழுத்தில் அனுஸ்வாரம் தரப்படுகிறது, ('ந'காரம் + த், த்2 = ஸகாரம், 'ந'காரம் + ச், ச்2=ஶகாரம், 'ந'காரம் +ட், ட்2=ஷகாரம்)

  எ.கா.- வித்3வான் + ததா2 = வித்3வாம்ஸ்+ ததா2 = வித்வாம்ஸ்ததா2 (3/25), க3தாஸூந் + ச = க3தாஸூந்ஶ்ச (2/11), ப்ரக்ஞாவாதா3ந் + ச = ப்ரக்ஞாவாதாந்ஶ்ச (2/11)

## 12. அனுஸ்வார ஸந்தி4

- **மோSனுஸ்வார: -** ஒரு பதத்தின் இறுதியில் 'ம'காரம் வந்து அதன் பிறகு ஏதாவது உயிர்மெய்யெழுத்து வந்தால், 'ம'காரம் அனுஸ்வாரமாக மாறுகிறது.

  எ.கா ஹர்ஷம்+குருவ்ருத்3த4 : = ஹர்ஷம் குருவ்ருத்3த4: (1/12) ,
  ஶங்க2ம்+த3த்4மௌ = ஶங்க2ம் த3த்4மௌ(1/12)

- **நஶ்சாபதா3ந்தஸ்ய ச4லி –** வர்க்கீய முதல், இரண்டாவது ,மூன்றாவது, நான்காவது எழுத்துக்கள் மற்றும் ஶ, ஷ, ஸ, ஹ (ச4ல்) போன்றவை பின்னால் வரும்போது, பதத்தின் இறுதியில் வரும் 'ந'காரம் மற்றும் 'ம'காரம் அனுஸ்வாரமாக மாறிவிடுகிறது.

  எ.கா. - வாஸாந் + ஸி = வாஸாம்ஸி (2/22)

## 13. அனு நாஸிக ஸந்தி4

- **யரோSனுனாஸிகேSனுனாசிகோ வா-**

  ஐந்து வர்க்கீய எழுத்துக்களில், முதல் நான்கு மெய்யெழுத்துகளில் எந்த ஒரு எழுத்தாவது பதத்தின் கடைசியில் இருந்து, அதன் பிறகு ஏதாவது அனு நாஸிக மெய்யெழுத்து வந்தால், அந்த மெய்யெழுத்து அந்த வர்க்கத்தினுடைய அனு நாஸிக எழுத்தாக மாற்றப்படுகிறது.

  எ.கா.- வாக் + மனோபி4ர்யத் வாங்மனோபி4ர்யத் (18/15) , ஷட்+ மாஸா: = ஷண்மாஸா: (8/24), ஜக3த் + நிவாஸ = ஜகந்நிவாஸ (11/37)

| **முன்னெழுத்து** | **பின்னெழுத்து** | **முன்னெழுத்தின் இடத்தில் ஏற்படும் மாற்றம்** |
|---|---|---|
| **க வர்கம்** | | ங் |
| **ச வர்கம்** | | ஞ் |
| **ட வர்கம்** | ங், ஞ், ண், ந், ம் | ண் |
| **த வர்கம்** | | ந் |
| **ப வர்கம்** | | ம் |

## 14. பரஸவர்ண ஸந்தி4

- **அனுஸ்வாரஸ்ய யயி பரஸவர்ண : -** அனுஸ்வாரத்திற்கு பின்னால் எந்த ஒரு வர்க்கத்தை சேர்ந்த மெய் எழுத்து வந்தாலும் அந்த அனுஸ்வாரம் அந்த வர்க்கத்தின் அனு நாஸிகமாக மாற்றம் அடைகிறது.

  எ.கா.- ஸம் + மூட4: =ஸம்மூட4: (5/20) , யும் + ஜந் = யுஞ்ஜந் (6/28)

- **வா பதா3ந்தஸ்ய -**மேலே கொடுக்கப்பட்டுள்ள (பதத்தின் கடைசியில் வரும் அனுஸ்வாரம்) விதிகள் கட்டாயத்தின் அடிப்படையில் இல்லை (optional). அதாவது பதத்தின் கடைசியில் வரும் அனுஸ்வாரம் அனு நாஸிகமாக மாறுவது தேவையின் அடிப்படையில் நடைபெறுகிறது.

  எ.கா.- மாம் + பஶ்யதி =மாம் பஶ்யதி/மாம்பஶ்யதி (3/30)

- **தோர்லி-** 'த' வர்கத்தின் பின் 'ல'காரம் வரும் போது பரஸவர்ண ஸந்தி4 நடைபெறுகிறது.

- எ.கா.- ஷ்ருதிமத் + லோகே = ஷ்ருதிமல்லோகே(13/13) , ஷ்ரத்3தா4வாந்+லப4தே = ஷ்ரத்3தா4வால்லப4தே (4/39)

## 15. பூர்வஸவர்ண ஸந்தி4

- **ஜ4யோ ஹோSந்யதரஸ்யாம் -** ஐந்து வர்க்கங்களின் முதல் நான்கு மெய் எழுத்துக்களுக்கு பின்னால் 'ஹ' காரம் வரும்போது அந்த 'ஹ' காரம் முன்னால் இருக்கும் மெய்யெழுத்தினுடைய வர்க்கத்தின் நாலாவது மெய்யெழுத்தாக மாறிவிடுகிறது. இந்த ஸந்தி4 கட்டாயம் இல்லை.

| முதல் எழுத்து | இரண்டாவது எழுத்து | இரண்டாவது எழுத்தின் இடத்தில் ஏற்படும் மாற்றம் |
|---|---|---|
| க வர்கம் | ஹ் | க்4 |
| ச வர்கம் | | ச்4 |
| ட வர்கம் | | ட்4 |
| த வர்கம் | | த்4 |
| ப வர்கம் | | ப்4 |

எ.கா.- ஏதத்3 + ஹி = ஏதத்3தி4 (6/42)

- **ஶஶ்சோ2டீ–** ஐந்து வர்க்கீய எழுத்துக்களில் , முதல் நான்கு மெய்யெழுத்துக்களில் எந்த மெய்யெழுத்து வந்தாலும் அதன் பின்னால் 'ஶ'காரமும், அதற்குப்பின் ஏதாவது உயிரெழுத்து அல்லது ஹ், ய், வ், ர் ஆகிய எழுத்துக்கள் வந்தால், 'ஶ'காரம் 'ச2' காரமாக மாறிவிடுகிறது. இந்த விதி கட்டாயம் இல்லை.

  எ.கா.- ஏதச் + ஷ்ருத்வா = ஏதச்ச்2ருத்வா (11/35),

  தஸ்மாத் + ஶாஸ்த்ரம் = தஸ்மாச்சா2ஸ்த்ரம் (16/24)

# II த்3வித்வம்(ஆகா3த்) விதிகள் II

த்வித்வாதி (இரட்டிப்பு)விதிகள் கடைபிடிப்பது பகவத்கீதையில் மிக முக்கியமானதாக இருக்கிறது. இதன் மூலம் கீதையை எளிய முறையில், பிழையின்றி, சரியான உச்சரிப்புடன் படிக்க உதவும் இந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### மூல த்வித்வ விதி (இரட்டிப்பு) - அநசி ச, ஸ்வராத் ஸம்யோகா3தி3ர்த்3விருச்யதே ஸர்வத்ர ।

உயிர் எழுத்துக்கு பின்னால் கூட்டெழுத்துக்கள் வரும் போது கூட்டெழுத்தின் முதல் எழுத்தின் த்வித்வம் பாணினீய இலக்கணத்தின் 'அநசி ச' சூத்திரம் மூலமும் மற்றும் பாணினீயஶிக்ஷாவின் 'ஸ்வராத் ஸம்யோகா3தி3ர்த்3விருச்யதே ஸர்வத்ர' என்ற சூத்திரத்தின் மூலமும் த்வித்வம் நடைபெறுகிறது.

**இந்த விதிகளுக்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

## 1.பரம் து ரேபஹகாராப்4யாம் ।

கூட்டெழுத்துக்களில் முதல் எழுத்து 'ரே'பம் அல்லது 'ஹ'காரமாக இருந்தால் அங்கே இரட்டிப்பு நடைபெறாது । *பாணினீயஶிக்ஷா*

எ.கா. – பர்யுபாஸதே, குஹ்யதமம்

## 2. (ந) ஸவர்ணே।

கூட்டெழுத்துக்களில் இரண்டு எழுத்துக்களும் ஒரே எழுத்தாக இருந்தால் அங்கே இயற்கையாகவே த்வித்வம் அதாவது இரட்டிப்பு நடைபெறுகிறது. இதனால் அங்கே கூடுதலான இரட்டிப்புக்கு அவசியம் இல்லை.

எ.கா. – உத்ஸந்ந , மய்யாவேஷ்ய *ப்ராதிஶாக்ய*

## 3.மூன்று கூட்டெழுத்துக்கள் சேர்ந்து வரும் போது இரட்டிப்பு தேவை இல்லை.

எ.கா. – க்ருத்ஸ்நம், ப4க்த்யா *பாணினீய ஷிக்ஷா*

## 4. ப்ரத2மைர்த்3விதீயாஸ்த்ருதீயைஷ்சதுர்தா:।

கூட்டெழுத்துக்களில் ஐந்து வர்க்கத்தின் அனைத்து எழுத்துக்களையும் இரட்டிப்பாக மாற்றும் போது இரண்டாவது எழுத்திற்கு முன்னால் முதல் எழுத்தும் மற்றும் நான்காவது எழுத்திற்கு முன்னால் மூன்றாம் எழுத்தும் உபயோகிக்கப்படுகிறது.எ.கா. – ஜிக்4ரந்= ஜி(க்3)க்4ரந் *பாணினீய ஶிக்ஷா*

# ஶப்தாவளி

- **ஆதேஷ (மாற்றம்)–** ஒரு எழுத்தை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக இன்னொரு எழுத்து எதிரியைப் போல வந்து அந்த இடத்தில் உட்கார்ந்து கொள்வது ஆதேஷ அல்லது மாற்றம் என்று அழைக்கப்படுகிறது. எ.கா. – 'யதி3+அபி= யத்3யபி'. இங்கே 'இ' யின் இடத்தில் 'ய்' மாற்றம் அடைகிறது. (ஶத்ருவத் ஆதேஶ)
- **வருகை –** ஏதாவது ஒரு எழுத்தோடு இன்னொரு எழுத்து நண்பனைப் போல வந்து அதோடு சேர்ந்து கொண்டு கூட்டெழுத்தாக மாறிவிடுகிறது. அப்போது அது வருகை (ஆகம) என்றழைக்கப்படுகிறது. எ.கா. – 'க்ருஷ்ண +சே2தும்' = க்ருஷ்ணச்சே2த்தும். இங்கே 'க்ருஷ்ண' உடைய 'ண' மற்றும் 'சேத்தும்' இடையே 'ச்' என்ற எழுத்து புதிதாக வருகிறது. (மித்ரவதா3க3ம:)

- **மறைவு–** இரண்டு எழுத்துக்களின் ஸந்தி4யின் போது ஏதாவது ஒரு எழுத்து மறைந்து விடுவது அல்லது அகற்றி விடுவது இதை லோபம் (மறைவு) என்று கூறுகிறோம்.
- **ப்ரக்ருதிபா4வ –** இரண்டு எழுத்துக்கள் சேரும்போது அங்கே மாற்றம், வருகை மற்றும் மறைவு எதுவும் நடைபெறாமல் சப்தங்கள் முன்னர் இருந்த மாதிரியே இருந்தால், அதை பிரக்ருதி பா4வ ஸந்தி4 என்று கூறுகிறோம்.
- **ப்ரத்யய(பின்னொட்டு)–** சில எழுத்துக்கள் தனியாக எந்த அர்த்தமும் இல்லாமல் இருக்கும். ஆனால் அவை வார்த்தைகளின் பின்னால் இணைந்து அர்த்தத்தில் மாறுதலை ஏற்படுத்தும். அவற்றை பின்னொட்டு என்கிறோம். இதில் 5 வகைகள் இருக்கின்றன. ஸுப், திங், க்ருத், தத்3தி4த, ஸ்திரீ ப்ரத்யய.
- **உபஸர்கம்(முன்னொட்டு)–** சில வார்த்தைகள் மூலவார்த்தை (தாது)களின் முன்னால் இணைந்து அதன் அர்த்தத்தை மாற்றுகின்றன அல்லது அதன் அர்த்தத்தை சிறப்பிக்கிறது. இதை முன்னொட்டு என்கிறோம். எ.கா:- ஹார் என்ற வார்த்தையின் அர்த்தம் தோல்வி அதனுடன் பல முன்னொட்டை சேர்த்து பல அர்த்தங்கள் பெறுகிறோம்.

  1. ப்ர + ஹார்= ப்ரஹார்
  2. ஸம் + ஹார= ஸம்ஹார்(அழிவு),
  3. வி + ஹார் = விஹார் (சுற்றுதல்)

  சம்ஸ்கிருத மொழியில் மொத்தம் 22 முன்னொட்டுகள் இருக்கின்றன. அவை – ப்ர, பரா, அப, ஸம், அனு, அவ, நிஸ், நிர், து3ஸ், து3ர், வி, ஆங், நி, அதி4, அபி, அதி, ஸு, உத், அபி4, ப்ரதி, பரி, உப .

- ## வல்லின – மெல்லின வ்யஞ்ஜன் மற்றும் அனுநாஸிகம்–

| வல்லின வ்யஞ்ஜன் | | மெல்லின வ்யஞ்ஜன் | | அனுநாஸிகம் |
|---|---|---|---|---|
| **க்** | க்2 | க்3 | க்4 | ங் |
| **ச்** | ச்2 | ச்3 | ச்4 | ஞ் |
| **ட்** | ட்2 | ட்3 | ட்4 | ண் |
| **த்** | த்2 | த்3 | த்4 | ந் |
| **ப்** | ப்2 | ப்3 | ப்4 | ம் |
| ஶ், ஷ், ஸ் | | ய், ர், ல், வ், ஹ் | | ம்ய்,ம்ல்,ம்வ் |

# ஸாமான்ய சமஸ்கிருதம்

சமஸ்கிருதத்தில் வேற்றுமை மற்றும் வினைச்சொல் பற்றி சாதாரண வாக்கியங்களில் எழுதப்படுகிறது. சமஸ்கிருதத்தில் வாக்கியங்கள் அமைக்க முதலில் வினைச்சொல்லை

(ஏதாவது செயல்) பார்க்க வேண்டும். தாது ரூபம் (மூல வார்த்தை) அந்த வேலையை அல்லது செயலை செய்பவர்களின் எண்ணிக்கையையோ மற்றும் அவர் எந்த பாலை சார்ந்தவர் என்பதை பொருத்தே அமைகிறது.

சமஸ்கிருதத்தில் ஆறு வேற்றுமைகள் இருக்கின்றன. கர்த்தா (எழுவாய் )(வேலையை செய்பவர்) யார்?, அதன் பிறகு கர்ம (செயல் - கர்த்தா எந்த வேலையை செய்வதற்கு விரும்புகிறார்), கரண்(கருவி - யாரால் செயல் செய்யப்படுகிறது), ஸம்பிரதான் (யாருக்கு ஏதாவது கொடுக்கப்படுகிறது), அபாதா3ன் (பிரிந்து வருவது எது, செயலில் எது நிலையாக இருக்கிறது) , அதி4கரண் (அந்த செயல் எந்த இடத்தில் நடைபெறுகிறது எதை சார்ந்து அமைகிறது). ஒவ்வொரு வார்த்தைக்கும் அந்தந்த வேற்றுமைக்கு ஏற்ற வேற்றுமை உருபுகள் கொடுக்கப்படுகின்றன. ஒரு வாக்கிய நிர்மாணத்திற்கான சில அடிப்படை நியமங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

சமஸ்கிருதத்தில் பாலின் (gender) அடிப்படையில் வார்த்தைகளின் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. வார்த்தைகளின் ரூபம், அதனுடைய பால் மற்றும் அதனுடைய கடைசி எழுத்து என்ற ஆதாரத்தின் படி வார்த்தைகள் மாற்றம் அடைகின்றன. ராம, ஶ்யாம, அனுராக3, போன்ற சப்தங்களின் வடிவம் ஒரே மாதிரியாக இருக்கின்றன. அதே மாதிரி மதி, கதி, ரதி போன்ற வார்த்தைகள் ஒரே மாதிரியாகவும், ஜகத், மநஸ் போன்ற வார்த்தைகள் ஒரே மாதிரியாகவும் இருக்கின்றன. ஆண் பால் ராம சப்தத்தை ஒத்த சில சாமானிய தாதுக்கள் (மூல வார்த்தை) பற்றிய ஒரு சில உதாரணங்களை பார்க்கலாம்.

## ‘அகாராந்த: புல்லிங்க: (ஆண் பால்)ராம ஶப்3த:’

| வேற்றுமை | பெயர் | ஒருமை | இருமை | பன்மை |
|---|---|---|---|---|
| **முதல்** | கர்தா | ராம: | ராமௌ | ராமா: |
| **இரண்டு** | கர்ம | ராமம் | ராமௌ | ராமான் |
| **மூன்று** | கரண் | ராமேண | ராமாப்4யாம் | ராமை: |
| **நான்கு** | ஸம்ப்ரதான் | ராமாய | ராமாப்4யாம் | ராமேப்4ய: |
| **ஐந்து** | அபாதான் | ராமாத் | ராமாப்4யாம் | ராமேப்4ய: |
| **ஆறு** | ஸம்பந்த் | ராமஸ்ய | ராமயோ: | ராமாணாம் |
| **ஏழு** | அதிகரண் | ராமே | ராமயோ: | ராமேஷு |
| **ஸம்போதன் (விளி)** | ஸம்போதன் | ஹே ராம! | ஹே ராமௌ! | ஹே ராமா: |

சில முக்கிய தா4துக்கள் (மூல வார்த்தை) :

1. க3ச்சதி – போகிறான் 4. படதி - படிக்கிறான்
2. க்ரீடதி – விளையாடுகிறான் 5. வததி - பேசுகிறான்
3. கா2த3தி – சாப்பிடுகிறான் 6. சலதி - போகிறான்.

எல்லா தா4துக்களுக்கும் ஏற்றவாறு **பட்2 தாதுவின் லட் லகார்** ( நிகழ் கால வினைச் சொல்) வடிவங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| எழுவாய் | ஒருமை | இருமை | பன்மை |
|---|---|---|---|
| **படர்க்கை** | படதி | படத: | படந்தி |
| **முன்னிலை** | படஸி | படத2: | படத2 |
| **தன்மை** | படாமி | படாவ: | படாம: |

சமஸ்கிருதத்தில் வினைச்சொல்லின் (கிரியா பதத்தின்) மூன்று வகைகள்(புருஷ்) முன்னிலை தன்மை, படர்க்கை இவற்றிற்கு ஏற்றாற் போல அமைகின்றன. மற்றவரை சொல்வதற்கு படர்க்கை. முன்னே இருப்பவரைப் பற்றி சொல்வதற்கு முன்னிலை, தன்னைப் பற்றி சொல்வதற்கு தன்மை என்ற வார்த்தை பிரயோகிக்கப்படுகிறது. இந்த விதிகளை மனதில் வைத்துக் கொண்டு சில வாக்கிய உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ராம: க3ச்சதி। (ராமன் போகிறான்) 1. ராம: பஶ்யதி। (ராமன் பார்க்கிறான்) 1. ராம: பட2தி। (ராமன் படிக்கிறான்) 1. ராம: வத3தி। (ராமன் சொல்கிறான்)
2. த்வம் க3ச்சஸி | (நீ போகிறாய்) 2. த்வம் பஶ்யஸி । (நீ பார்க்கிறாய்) 2. த்வம் பட2ஸி। (நீ படிக்கிறாய்) 2. த்வம் வத3ஸி। (நீ சொல்கிறாய்)
3. அஹம் க3ச்சாமி। (நான் போகிறேன்) 3. அஹம் பஶ்யாமி । (நான் பார்க்கிறேன்) 3. அஹம் படா2மி । (நான் படிக்கிறேன்) 3. அஹம் வதா3மி। (நான் சொல்கிறேன்)

**அனைத்து வேற்றுமை உருபுகளின் சில உதாரணங்கள் :**

1. ராம: க3ச்சதி(ராமன் போகிறான்) - ராம: (முதல் - கர்தா)
2. ராம: க்3ராமம் க3ச்சதி(ராமன் கிராமத்திற்கு செல்கிறான்) - க்3ராமம் (இரண்டாவது – கர்ம)
3. ராம: கலமேந லிக2தி(ராமன் பேனாவால் எழுதுகிறான்) - கலமேந (மூன்றாவது – கருவி)
4. ராம: கிருஷ்ணாய ப2லம் த3தா3தி (ராமன் கிருஷ்ணனுக்கு பழம் கொடுக்கிறான் - கிருஷ்ணாய (நான்காவது - ஸம்ப்ரதான்)
5. ராம: க்3ராமாத் ஆக3ச்சதி (ராமன் கிராமத்தில் இருந்து வருகிறான்) – க்3ராமாத் (ஐந்தாவது – அபாதான்)
6. ராமஸ்ய புத்ர: குஷ: (ராமனுடைய மகன் குசன்) -ராமஸ்ய (ஆறாவது - சம்பந்தம்)
7. ராம: வித்3யாலயே பட2தி ! (ராமன் பள்ளியில் படிக்கிறான்) – வித்3யாலயே (ஏழாவது – அதிகரன்)

|| இதி ||

*கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு இடங்களில் உபயோகிக்கும் முன் அனுமதி பெறுதல் அவசியம்.*
*அனுமதி பெற consent@learngeeta.com இல் எங்களை அணுகவும்.*